PERSONAL DATA PROTECTION COMMISSION SINGAPORE

# பாதுகாத்துக் கொள்ளுங்கள்








1 செப்டம்பர் 2019 முதல், சட்டப்படி தேவைப்பட்டால் அல்லது உங்கள் அடையாளத்தை நிரூபிக்க அவசியமானால் மட்டுமே நிறுவனங்கள் உங்களது அடையாள அட்டை எண்ணை* உங்களிடம் கேட்க முடியும்.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும்?



### 01 கேளுங்கள்

உங்களது அடையாள அட்டை எண் சட்டப்படி அல்லது உங்கள் அடையாளத்தை நிரூபிக்க அவசியமாகத் தேவைப்படுகிறதா?

ஒரு நிறுவனம் உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டுமானால், உங்களது அடையாள அட்டையைக் காட்டினாலே போதுமானது.

### 02 மாற்று வழிகளைத் தேர்ந்தெடுங்கள்

சட்டப்படி தேவைப்படாவிட்டால் அல்லது உங்கள் அடையாளத்தை நிரூபிக்க அவசியமில்லாவிட்டால், மற்ற தனிப்பட்ட விவரங்களை நிறுவனம் ஏற்றுக்கொள்ளுமா எனக் கேளுங்கள்.
எ.கா. கைபேசி எண் அல்லது அடையாள அட்டை எண்ணின் ஒரு பகுதி (எ.கா. XXXXX567A).






### 03 பாதுகாத்துக் கொள்ளுங்கள்

சட்டப்படி தேவைப்படாவிட்டால், நிறுவனங்கள் உங்களது அடையாள அட்டையை வைத்துக்கொள்ள அனுமதிக்காதீர்கள் (தற்காலிகமானதாக இருந்தாலும்)

*வெளிநாட்டு அடையாள அட்டை எண் (FIN), வேலை அனுமதி அட்டை எண், பிறப்புச் சான்றிதழ் எண், மற்றும் இந்த எண்கள் கொண்ட அடையாளப் பத்திரங்கள் ஆகியவற்றுக்கும் இந்த விதிமுறை பொருந்தும்.



ஒரு நிறுவனத்தில் புதிதாக
வேலைக்குச் சேருதல்



ஓட்டலில் அறை
எடுத்துத் தங்குதல்



மருந்தகத்தில்
சிகிச்சை பெறுதல்



கைபேசி இணைப்புக்குப்
பதிவு செய்தல்



தனியார் கல்வி
நிலையத்தில்
மாணவராகச் சேருதல்



# கொடுப்பதா
## – அல்லது –
# கொடுக்காதிருப்பதா



உங்களது அடையாள அட்டை எண்ணை எப்போதெல்லாம் கொடுக்கலாம்,
எப்போதெல்லாம் கொடுக்கக்கூடாது என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள்:



இலவசமாக வாகனம்
நிறுத்திவைக்கும்
சலுகையைப் பயன்படுத்திக்
கொள்ளுதல்



கடை உறுப்பினராகப்
பதிவு செய்தல்



கருத்து தெரிவித்தல் அல்லது
ஒரு பொருளிலோ சேவையிலோ
உங்களுக்குள்ள ஆர்வத்தைப்
பதிவு செய்தல்




திரைப்பட நுழைவுச்சீட்டுகளை
இணையத்தில் வாங்குதல்




அதிர்ஷ்டக் குலுக்கலில்
பங்குபெறுதல்